# வெள்ளிவிழா கொண்டாடும் 'சரவண பவன்'

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்றொரு பழமொழி உண்டு. இந்த நோயற்ற வாழ்வுக்கு உணவு பெரிய பங்காற்றுகிறது. சுத்தமான ஆரோக்கியமான உணவுகளே நாம் சிறந்து வாழ உதவியாக இருக்கின்றன. சில சமயங்களில் நாம் ஆரோக்கியமான உணவை வீட்டில் தயார் செய்கிறோம். சிலர் அதனை வெளியில் தேடுகின்றனர். அப்படி தேடி வருவோர்க்கு மிக சிறந்த உணவுகளை கொடுப்பதில் முதன்மை வகிக்கும் சரவண பவன் உணவகத்தின் உரிமையாளர் திரு.சிவகுமார் அண்மையில் நம்நாட்டில் இயங்கி வரும் கிளைகளுக்கு வருகை புரிந்திருந்தார். அவரையும் மலேசிய கிளையின் பொறுப்பாளர் திரு. பாண்டியனையும் வணக்கம் மலேசியா சந்தித்தது. திரு. சிவக்குமாரின் ருசிகர பேட்டி.... இதோ உங்களுக்காக...

**கே : வணக்கம் திரு. சிவகுமார். உங்களைப் பற்றி...**

ப : நான் சென்னையில் பிறந்து வளர்ந்து அங்கேயே படித்து முடித்தேன். படித்து முடித்த நான் அப்பாவின் இந்த தொழிலை தொடர்ந்தேன். உலக அளவில் இது ஒரு பிரபலமான உணவகமாக திகழ்வதை எங்களது வெற்றியின் கிரீடமாக நினைக்கின்றோம். இப்பொழுது நானும் என் சகோதரரும் வழி நடத்தி வருகிறோம். 25 வருடங்களாக இந்த சரவண பவன் உணவகத்தை வெற்றியோடு நடத்தி வருகிறோம்.

**கே : உலக அளவில் இந்த நிறுவனத்தை கொண்டு செல்லும் எண்ணம் எப்படி வந்தது?**

ப : எல்லாம் மக்கள் கொடுத்த ஊக்கம் தான் முக்கியமாக இந்தியாவில் அதிலும் சென்னையில் படிப்படியாக நிறைய கிளை உணவகங்களை நிறுவி வந்த போது எங்களை நாடி வருபவர்களின் திருப்தி மற்ற உணவகங்களை உருவாக்க ஏதுவாக இருந்தது. அப்போது அங்கே வருபவர்களில் வெளிநாட்டவர்களும் அங்கிருந்து வெளிநாடுகளுக்கு செல்பவர்களும் இருந்தனர். அவர்கள் எங்களது உணவில் ஈர்ப்பு கொண்டு அவர்கள் நாட்டிலும் இத்தகைய ருசியான உணவுகள் வேண்டுமென கேட்டு மின்னஞ்சல் வழியாகவும் நேரில் கேட்டு கொண்டதன் விளைவாகவும் இன்று பல உலக நாடுகளில் எங்களது கிளைகள் உருவாகி இருக்கின்றன. இதற்கு மக்களின் ஆதரவுதான் காரணம். இப்போது 7 நாடுகளில் 18 உணவகங்கள் இருக்கின்றன.

**கே : அவை எந்தெந்த நாடுகள் என கூற முடியுமா...?**

ப : இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஓமன், துபாய், கனடா, லண்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருக்கின்றன.

**கே : சரவண பவனின் சிறப்பு என்ன? நீங்கள் எப்படி வித்தியாசப்படுகிறீர்கள்?**

ப : எல்லாம் எங்களது உணவு வகைகள் தான். நாங்கள் தயாரிக்கும் தென்னிந்திய சைவ உணவுகளே எங்களை வித்தியாசப்படுத்துகின்றன. விதவிதமான சைவ உணவு வகைகளே எங்களின் வெற்றிக்கு காரணம். 25 வருடமாக நாங்கள் இம்மாதிரியான, ருசியான தென்னிந்திய சைவ உணவுகளில் சிறப்பாக இருப்பதால் அதுவே எங்களின் அடையாளமாகவும் மாறி விட்டது. சரவண பவன் என்றால் சுவையான சைவ உணவுகள் என்ற அடைமொழி வந்து விட்டது. இதுவே எங்களின் சிறப்பு. அதனாலே நாங்கள் வித்தியாசப்படுகிறோம்.

**கே : வெளிநாடுகளில் உங்களுக்கு ஆதரவு எப்படி இருக்கிறது?**

ப : அவர்களே கேட்டுக் கொண்டதினால் தான் நாங்கள் அங்கே கிளை உணவகங்களை நிறுவினோம். அதனால் உண்மையில் ஆதரவு மிக அதிகமாகவே இருக்கிறது. அதிலும் மலேசிய மக்களின் ஆதரவு மிக சிறப்பாகவே இருக்கிறது.



மலேசியக் கிளை பொறுப்பாளர் பாண்டியனுடன் சிவகுமார்...

இந்திய மக்கள் மட்டுமில்லாமல் மற்ற இனத்தவரும் நல்ல ஆதரவை வழங்குகிறார்கள்.

**கே : உங்கள் வெற்றியின் ரகசியம்...?**

ப : எல்லோருக்கும் தனி தனி காரணம் இருக்கும் எங்களை பொருத்தவரை எல்லாம் எங்களுடைய தரம், சிறந்த உணவு வகைகள், உபசரிப்பு, சுத்தம் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். தரம் நிரந்தரம் என்பது போல கடந்த 25 ஆண்டுகளாக எங்களுடைய தரம் மாறியது இல்லை. இந்தத் தரமே எங்களின் வெற்றியின் இரகசியம் என்றே கூறலாம்.

**கே : உங்களின் சாதனை என்று எதை நினைக்கிறீர்கள்?**

ப : நான் அடைந்த சாதனை என்பதை விட என் தந்தை அடைந்ததை தான் பெரிய சாதனையாகக் கருதுகிறேன். அவர் தொடங்கி இந்த வருடத்தோடு 25 ஆண்டுகளாகின்றன. இது எங்களுக்கு வெள்ளிவிழா ஆண்டாகவும் இருக்கிறது. என் தந்தை இவ்வளவையும் உருவாக்கி இவ்வளவு தூரம் கொண்டு வந்தது எல்லாம் அவரோடு இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்தது. எங்களிடம் பணிபுரியும் பணியாளர்ளாலும் மலேசியாவில் பொறுத்தமட்டில் திரு.பாண்டியனின் சிறந்த கவனிப்பாலும் மற்ற பணியாளர்களின் பொறுப்புணர்ச்சியாலும் நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம் என்று கூறலாம். என் தந்தை வெற்றிக்கும் சாதனைக்கும் கொஞ்சம் பெருமை சேர்த்து இருப்பது எங்களது 6 வருடத்தில் நாங்கள் நிறுவிய 18 கிளைகளே. நாங்கள் சாதித்த ஒரு சாதனையாக கருதுகிறோம்.

**கே : உங்களது அடுத்த திட்டங்கள் என்ன?**

ப : இப்பொழுது உள்ள உணவகங்களை இன்னும் சிறப்பாக நடத்த முயற்சிகள் நடந்து வருகின்றன. இன்னும் சில நாடுகளுக்கு சென்று அங்கேயும் எங்களது கிளைகளை திறந்து வெற்றி பெற வேண்டும் என்பதே எங்களது எதிர்காலத் திட்டமாகும்.

**கே : உங்களைப் போன்ற இளம் தொழிலதிபர்களுக்கு என்ன சொல்லிக் கொள்ள விரும்புகிறீர்கள்..?**

ப : கண்டிப்பாக விடா முயற்சி, சுறுசுறுப்பு மற்றும் வேலையில் முழு கவனம் ஆகியவை மிக முக்கியம். நாம் செய்யும் தொழிலை எப்படி முன்னேற்ற வேண்டும் என்ற நோக்குடனும், வெற்றியுடனும் செயல்பட்டால் கண்டிப்பாக வெற்றி பெறலாம் என்பது என்னுடைய சின்ன அட்வைஸ்.

**கே : மலேசியர்களுக்கு சொல்ல விரும்புவது....?**

ப : கண்டிப்பாக உங்களுக்கு பிடித்த வகையில் எல்லா உணவுகளும் சிறப்பான உபசரிப்பும் எங்களிடம் இருக்கிறது. உங்களின் அன்பு மனம் குளிர எங்களது உணவகத்திற்கு வந்து ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

நாகா

## ஆர்வம் மட்டும் போதாது...

கட்டட கலைத் துறையில் பட்டம் பெற்று, பிரிக்பீல்ட்ஸில் 'Laashya Bridal Gallery' எனும் அழகு கலைக் கூடத்தை 3 ஆண்டுகளாக இயக்கி வருகிறார் வேணி. அழகு கலையில் உள்ள தனது 5 ஆண்டு கால அனுபவத்தையும் தான் படித்த புகைப்படத் துறையில் உள்ள ஈடுபாட்டையும் ஒன்று சேர்க்கும் வகையில் உருவெடுக்கப்பட்ட நிறுவனம்தான் இது. இங்கு இவர் திருமண புகைப்பட ஆல்பம், திருமணத்திற்கான ஆடை அலங்காரங்கள், மற்றும் முக ஒப்பனை போன்ற சேவைகளை செய்கிறார். தனது பெற்றோர் மற்றும் குடும்பத்தினரின் ஆதரவில் வெற்றி நடை போட்டு வருகிறார். சிறப்பான சேவையை வழங்குவதற்கு ஆர்வம் மட்டும் போதாது, மாறாக செய்யும் தொழிலை பற்றி அனைத்தையும் முழுமையாக கற்றிருக்க வேண்டும். இந்திய இளைஞர்கள் ஒன்றுப்பட்டு ஒரு தொழிலை உருவாக்குவதன் வழி, நம் சமுதாயத்தை தொழில் துறையில் முன்னேற்றமடைந்த ஒரு சமுதாயமாக்க முடியும் என்கிறார் இவர்.



இவரை தொடர்பு கொள்ள:
**Miss. Veni, Laasya Bridal Gallery, No.241-2, 2nd Flr, Jln Tun Sambanthan, Brickfields, 57200 Kuala Lumpur. Tel: 03-22601545**

